சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R. பாண்டி, பிஎஸ்.ஸி.,பிஎல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ம் நாள் வெள்ளிக்கிழமை

அசல் வழக்கு எண்.564/2019

**CNR No.TNSV030011582019**

---

சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் தாலுகா,
ஊத்திக்குளம் கிராமத்தில் இருக்கும் முத்தையா கோவில்
பங்காளிகள் என்ற முறையில்

1. முத்துக்கருப்பன்
2. கருப்பையா
3. குப்பான் (எ) பூச்சி
4. பாண்டி ...வாதிகள்

(ஆகியோர்கள் தங்களுக்காகவும் முத்தையா கோவில்
ஊத்திக்குளம் பங்காளிகள் என பிரதிநிதித்துவம் மூலம்)

...எதிர்....

1. காசிவிஸ்வநாதன் (Died)
2. வடிவேல்
3. தே. உடையார்
4. சந்திரமோகன்
5. கரு. ராமையா
6. கரு. முத்தையா

(சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் தாலுகா,
செங்குளிப்பட்டி போஸ்ட், செங்குளிப்பட்டி கிராமம்)

7. சிவகங்கை மாவட்டம், சிவகங்கை மாவட்ட ஆட்சியர்
அலுவலக வளாகத்தில் இருக்கும் தமிழக அரசு
அதன் பிரதிநிதி மாவட்ட ஆட்சியர் மூலம்

8. வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம்
காளையார்கோயில். ....பிரதிவாதிகள்

இவ்வழக்கானது 15.11.2019-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 26.03.2026-ம் தேதியன்று என் முன்னிலையில் இறுதி விசாரணைக்காக வந்த போது வாதிகளுக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.G.சித்தீஸ்வரன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 6 பிரதிவாதிகளுக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.A.மதன்மோகன் அவர்கள் ஆஜராகியும், 7, 8 பிரதிவாதிகளுக்காக அரசு வழக்குரைஞர் அவர்கள் ஆஜராகியும், 7, 8 பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் அவர்கள் ஆஜராகாததால் அவர்களை ஒருதலைபட்சமாக தீர்மானித்தும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இவ்வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்தும் இதுநாள் வரையில் இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## தீர்ப்புரை

இந்த வழக்கில் கண்டுள்ள சர்வே எண்.419/1 விஸ்தீரணம் 0.52.5 இடத்தினைப் பொறுத்து முத்தரையர் இன பரம்பரை கோவில் என விளம்புகை மற்றும் உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும், இந்த வழக்கில் கண்டுள்ள சர்வே எண்.419/1 விஸ்தீரணம் 0.52.5 இடத்தில் உள்ள பல வகையான மரங்களை அப்புறப்படுத்த கூடாது என இந்த பிரதிவாதிகள் 1 முதல் 6 நபர்கள் மீது செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும் மற்றும் செலவுத் தொகை கோரியும் வாதிகளால் இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

### 2) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம் :

இந்த வழக்கில் உள்ள சொத்து மு.வாணியங்குடி குரூப் ஊத்திக்குளம் கிராமத்தில் முத்தரையர் சமுதாய பொதுமக்கள் 120 குடும்பங்கள் வசித்து வருகிறது. மேற்படி கிராமத்தில் 200 ஆண்டுகள் பழமை வாய்ந்த முத்தரையர்களின் குலதெய்வமான முத்தையா கோயில் முன்னோர்கள் ஆதிகாலம் முதல் அமைத்தும் காத்தான் வகையறா, முத்துக்கருப்பன் வகையறா மற்றும் கருப்பையா அதன்பின்னர் முத்துக்கருப்பன், பெரியகருப்பன், சின்னான் ஆகியோர்கள் முத்தையாசாமியின் அருள் இறங்கி மற்றவர்களுக்கு குறி சொல்லும் வழக்கமாகவும், வழிகாட்டியாகவும் வாழ்ந்து வந்துள்ளார்கள். இந்த முத்தரையர் சமூகத்தினை பொறுத்து குழந்தை பிறந்தவுடன் முதல் முடி இறக்கி காது குத்தி மூதாதையர்கள் மற்றும் தங்கள்

குழந்தைகளுக்கு முத்தையா என பெயர் சூட்டி பரம்பரையாக நேர்த்திகடன் செய்தும், வழிபாடு செய்தும் வந்துள்ளார்கள். இந்த கோவிலும் பரம்பரையாக முத்தரையர் இன கோவிலாகும்.

இந்த வழக்கில் உள்ள ச.எண் 418/3 நஞ்சை பரம்பரையாக அனுபவம் இடம் விவசாயம் செய்தும் அனுவித்தும் அதன் கீழ்புறம் உள்ள மேற்படி முத்தையா கோவில் இடத்தையும் சேர்த்து காத்தான் வகையறா அனுபவித்து வந்ததில் முத்தையா கோவில் மேல்புறம் இடத்தில் வட்டக்கிணறு காத்தான் வகையாறா வெட்டி பட்டா இட சொத்தில் விவசாயத்திற்கு பாசனம் செய்து வந்தார்கள். இந்த இடத்தின் அருகில் ச.எண்.419/1 இடத்தில் தான் முத்தையா கோவில் உருவாக்கி காத்தான் வகையறாவுடன் மற்ற பங்காளிகள் வகையாறா குலதெய்வ வழிபாடு நாளது நாள் வரை செய்து வருகிறார்கள். முத்தையா கோவில் இடத்தில் பாலமரங்கள், புளியமரங்கள், அத்துடன் பல்வகை மரங்கள் குலதெய்வ வழிபாடு செய்வோர்களால் உருவாக்கபட்டுள்ளன. இந்த கோவிலும் சர்வே எண்.419/1 விஸ்தீரணம் 0.52.5 கொண்ட இடத்தில் மேற்படி முத்தையா கோவில் முன் காலத்தில் கூரை கொட்டகையிலும், அதன் பின்னர் ஒட்டுத்தாவாரம் அமைத்து தெய்வம் இருந்து வருகிறது. முன்னோர் காலம் முதல் நாளது தேதி வரை குலதெய்வமாக வருடாவருடம் தை மாதம் 1-ம் தேதி பொங்கல் வைத்து விழா கொண்டாடுவதும் கார்த்திகை மாதம் திருகார்த்திகை அன்றும், சித்திரை மாதம் 1-ம் தேதி தமிழ் வருடபிறப்பு விழா கொண்டாட்டங்களும், ஊத்திக்குளம் கிராமம் சார்பாக வருடாவருடம் சித்திரைமாதம் 5-ம் தேதி அன்றும் தெய்வங்கள் வழிபாடு செய்து நிகழ்ச்சிகளும் அன்னதானமும் தங்களது முத்தரையர் இன சார்பாக செய்து வருகிறார்கள்.

இந்த கோவில் சம்பந்தமாக வாதிகள் முத்தரையர் இனம் சார்பாக நன்கொடை வசூலித்தலும் விழா எடுத்தலும் 1980, 1991 முதல் நாளது தேதி வரை வாதிகள் இன சமுதாயமே கோவில் நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது. மேலும் இந்த கோவில் இடமும் 1971-ம் வருடம் முதல் முத்தையா கோவில் எனவும் அத்துடன் சேர்ந்த வட்டக்கிணறும் செட்டில்மென்ட் ரிஜிஸ்டர் எஸ்.ஆர். நம்பர் 37A/SVG/1971 DATED 05.03.1971 மற்றும் UDR காலம் முதலும் இன்றைய தேதி வரை முத்தையா கோவில் என தெய்வத்தின் பெயரிலேயே அரசு ஆவணங்கள் பட்டா ஏற்பட்டுள்ளது. மேற்படி கோவில்

செங்குளிப்பட்டி கிராமத்தின் அருகில் உள்ளதாலும் மேற்படி கிராம மக்களும் பொதுவான வகையில் வழிபாடு செய்வார்கள். அதே சமயத்தில் மேற்படி கிராம மக்கள் பூஜை முறையில் யாரும் தலையிடுவதில்லை. தங்களால் இயன்ற காணிக்கைகளை அவரவர்கள் விருப்பம் போல் செய்வார்கள். ஆனால் பொங்கல் திருவிழா, கார்த்திகை திருவிழா, தமிழ் வருடத்திருவிழா ஆகியவற்றிலும் தெய்வ வழிபாடு ஆகியவை அனைத்தும் முத்தரையர் இனம் சார்பாக இந்த வாதிகளே நீண்ட காலமாக செய்து வருகிறார்கள்.

இந்த கோவிலை பொறுத்து பிரதிவாதிகள் இந்த முத்தரையர் இன கோவிலில் வழிபாடு செய்ய உரிமை உள்ளது போல் பாவித்து கொண்டு வாதிகளது பூஜை உரிமைகளையும், பரம்பரை உரிமைகளையும் மற்றும் புதிய கட்டிடம் எழுப்புவது சம்பந்தமாக 2018-ம் வருடம் முதல் பிரஸ்தாபம் செய்து வரும் நிலையில் இந்த வாதிகள் 23.08.2018 தேதிய சட்ட அறிவிப்பில் பிரதிவாதிகளுக்கு மட்டுமே உரிமை உள்ளது போலவும் வாதிகளான முத்தரையர் இன மக்களுக்கு உரிமையில்லை என்று கூறி வீண் பொய் பிரச்சாரம் செய்து வந்த நிலையில் முத்தரையர் இன பாதுகாப்பு கருதி மாவட்ட ஆட்சியர் மற்றும் அனைத்து துறை நபர்களுக்கும் உரிய அறிவிப்பு செய்யப்பட்டது. இந்த அறிவிப்பிற்கு பின்னரும் மாவட்ட ஆட்சியர் மற்றும் இதர நபர்களிடமிருந்து எந்தவிதமான பதில் இல்லாத நிலையில் வாதிகளும் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் மதுரை கிளையில் இந்த வழக்கில் உள்ள 1 வது நபர் முத்துக்கருப்பன் என்பவரும் W.P.MD.375/2018 என மனு தாக்கல் செய்து அதில் தங்களது முத்தரையர் இனத்திற்கு உரிய பாதுகாப்பு கோரியும் மனுதாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது. இந்த முத்தரையர் சமூக இன கோவிலான "முத்தையா கோவில்" கட்டிட சுவர்கள் இடிந்து ஓட்டு மேற்கூரை பழுதடைந்து பல வருடங்களாக உள்ளதால் பாதுகாப்பு கருதி முத்தையா கோவில் குலதெய்வ வழிபாடு செய்யும் குடும்பத்தார்கள் வசம், நன்கொடை பெற்றும், வாதிகள் குடும்பத்தார் சார்பாகவும் ஊத்திக்குளம் கிராமத்தார்கள் ஒத்துழைப்புடன் கட்டிடம் கட்ட வேண்டும் என ஏகமனதாக முடிவு செய்யபட்டது.

இந்த வாதிகளின் முத்தரையர் இன கோவில் தெய்வமான முத்தையா கோவிலின் கட்டிடத்தை கட்டக் கூடாதென்ற கெட்ட எண்ணத்துடன் தாவா இடத்தில் உள்ள சுமார் 1 லட்சம் பெறுமான பல்வகை மரங்களை வெட்டுவதாகவும்,

பிரதிவாதிகள் பொய்யான பிரச்சாரங்கள் செய்தும், மேற்படி கோவிலில் தங்களுக்கும் உரிமை உள்ளது போல் நினைத்து கொண்டு வாதிகளை மிரட்டியும் ஊரை விட்டு விரட்டி விடுவோம் என்றும் தவறான பிரச்சாரம் செய்துள்ளார்கள். பிரதிவாதிகள் அனைத்து நபர்களும் செங்குளிப்பட்டி கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றும் கள்ளர் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்ற நிலையில் உள்ளதால், வாதிகளாகிய முத்தையா கோவில் முத்தரையர் இனத்திற்கும் யாதொரு தொடர்பும் கிடையாது. மேற்படி கிராம மக்கள் பூஜை முறையில் தங்களால் இயன்ற காணிக்கைகளை அவரவர்கள் விருப்பம் போல் செய்யப்படும் நிலையில் 14.09.1980 முதல் 29.09.2018 வரை 38 வருடங்களாக பொங்கல் திருவிழா, கார்த்திகை திருவிழா, தமிழ் வருடத்திருவிழா, தெய்வ வழிபாடு மற்றும் 2013, 2018-ம் வருடம் ஊத்திகுளம் கிராமத்தார்களால் வள்ளி திருமணம் நாடகம் நடத்தப்பட்டும், இந்த விழாக்காலங்களில் 2014 மற்றும் 2018- ம் வருடம் சமுதாய இனம் சார்பாக கோயில் திருவிழா புகைபடங்களும் எடுக்கப்பட்ட நிலையில் அனைத்துமே முத்தரையர் இனம் சார்பாக வாதிகளே நீண்ட காலமாக செய்து வருகிறார்கள். மேலும் திருவிழா நன்கொடை வசூலில் திருவிழா செலவு போக மீத தொகையினை சிறு வட்டிக்கு தங்கள் சமுதாய நபருக்கே கொடுத்து அதனை அடுத்த வருட திருவிழாவிற்கு முன் வசூலித்து விடுவோம். இந்த கோவில் வழிபாடு சம்பந்தமாக பிரதிவாதிகளுக்கு 12.03.2019-ம் தேதி வாதிகள் சார்பாக உரிய சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டும் அதனை 14.03.2019-ம் தேதி பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டு நாளது தேதி வரை எவ்வித மறுப்பு அறிவிப்பும் அனுப்பப்படவில்லை.

மேலும் வாதிகள் இந்த வழக்கு சர்வேஎண்.419/1, விஸ்தீரணம் 0.52.5 முத்தைய்யா கோவில் பெயருக்கே பட்டா வழங்கக் கோரி 7, 8 பிரதிவாதிகளுக்கு சட்ட அறிவிப்பு அனுப்பட்டும் அதனை மேற்படி பிரதிவாதிகள் 16.05.2019-ம் தேதி அறிவிப்பினை பெற்றுக்கொண்டு நாளது வரை பட்டா உத்தரவு வழங்கப்படாமலும் நிலுவையில் இருந்து வருகிறது. எனவே மேற்படி நபர்களும் இந்த வழக்கிற்கு ஓர் தரப்பினர் என்ற முறையிலும் ஓர் அவசியமான கட்சிக்காரராகவும் இந்த வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ளது. இந்த கோவிலை பொறுத்தும், இடத்தினைப்பொறுத்தும் வாதிகள் தங்களது முத்தரையர் இன பாதுகாப்பு கருதியும் மற்றும் கோவில் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு இந்த வழக்கும் தங்களுக்காகவும் ஊத்திக்குளம் கிராம பிரதிநிதித்துவ சார்பாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது. இந்த வழக்கு

சொத்தினைப் பொறுத்து ஊத்திக்குளம் கிராம முத்தைய்யா கோவில் மற்றும் அதனை சுற்றியுள்ள வேலாமரம் 50ம், வேப்பமரம் 3ம், புளியமரம் 16ம், உசிலைமரம் 3ம் ஆக கோவில் இடத்தில் அருகில் உள்ள பால மரம் 2, வீரமரம் 1 ஆகிய மரங்கள் உட்பட தாவா இடத்தில் இருந்து வருகிறது. ஒரே சமூதாயமான முத்தரையர் இனத்திற்கு உரிமையுடையதை அழிக்கும் விதமாக 1 முதல் 6 பிரதிவாதிகள் 7, 8 பிரதிவாதிகளும் கூட்டு சேர்ந்து கொண்டு டெண்டர் விடப்போவதாகவும், இந்த கோவில் இடத்தினை மாற்றம் செய்து விடுவதாகவும் கூறப்பட்ட நிலையில் இந்த பரம்பரை முத்தரையர் இன கோவில் பாதுகாப்பு கருதி இந்த வழக்கினை இந்நீதிமன்றத்தில் விளம்புகை மற்றும் செயலுறுத்துக்கட்டளை, உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 5-ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையின் சுருக்கம்- இதனை 2, 3, 4, 6 பிரதிவாதிகள் ஏற்றுக்கொள்கிறார்கள்.**

தாவா பிராதில் வாதிகள் கூறியுள்ளது போல் தாவா கோவிலுக்கும் வாதிகளுக்கும் எக்காலத்திலும் எந்த உரிமையும் இருந்ததில்லை. வழக்கு தோதிற்காக வாதிகள் பொய்யான விபரங்களை கூறி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளனர். வாதிகள் தாவா சொத்தில் உள்ள ஐயனார் முத்தையாகோவிலில் பணி செய்பவர்கள் இல்லை. தாவா கோவிலுக்கும் இவர்களுக்கும் எந்த காலத்திலும் எந்த உரிமையும் இருந்ததில்லை. இவர்கள் கோவில் பங்காளிகளும் இல்லை. உடன் பங்காளிகளும் இல்லை. வாதிகளுக்கு தாவா கோவில் குலதெய்வமும் இல்லை. இந்நிலையில் வாதிகள் இந்நீதிமன்றத்தில் தாவா வழக்கை தாக்கல் செய்திருப்பது நிலைநிற்கத்தக்கதல்ல. தாவா கோவிலுக்கு பணி செய்ய பிரதிவாதி வகையறாவால் ஊத்திகுளம் கிராமத்தைச்சேர்ந்த காத்தான் குடும்பத்தினரும் மற்றும் சின்னக்கருப்பன் குடும்பத்தினர்கள் மட்டுமே நியமனம் செய்யப்பட்டுள்ளனர். எனவே தாவா கோவிலுக்கு பணி செய்யும் உரிமை இந்த இரு வாரிசுகளுக்கு மட்டுமே உண்டு.

தாவா புல எண் 419, வாணியங்குடி குரூப்பில் உள்ள புன்செய் நிலம் முழுவதும் கண்டிப்பட்டி சேகரம் செங்குளிப்பட்டி கிராமத்தில் இருக்கும் குலையர் அம்பலம் வகையறா பங்காளிகளின் முன்னோர்களுக்கு பாத்தியப்பட்டதாகும். மேற்படி

புன்செய் நிலத்தின் வடபகுதியில் பிரதிவாதிகளின் முன்னோர்கள் தங்கள் சொந்த செலவில் மண் சுவர் வைத்து பனை ஓலை வேய்ந்த கூரை கட்டிடம் கட்டியும் அதற்கு பின்னர் மண் சுவர் ஓட்டு கூடம் கட்டியும் ஐயனார் முத்தையா சுவாமியை பிரதிஸ்ட்டை செய்து காவல் தெய்வமாக வழிபாடு செய்து வந்தனர். அவர்களை தொடர்ந்து அவர்களின் வாரிசுகளான பிரதிவாதிகளின் குலையர் வகையறா பங்காளிகளும், பிரதிவாதிகளும் தொடர்ந்து வழிபாடு செய்து வருகின்றனர். செட்டில்மெண்ட காலத்தில் சர்வே செய்யும் போது மேற்படி புல எண் 419- ஐ பிரதிவாதிகளின் பங்காளிகளின் விண்ணப்பத்தின் அடிப்படையில் 419/1, 419/2 என உட்பிரிவு செய்து, 419/1-ஐ தாவா கோவிலின் பெயரிலும், 419/2-ஐ பிரதிவாதிகளின் பங்காளிகள் பெயரிலும் (S.L.R) கூட்டுப்பட்டா வழங்கப்பட்டு அது முதல் அதன்படியே பிரதிவாதிகளின் முன்னோர்களை தொடர்ந்து பிரதிவாதிகள் ஆண்டு அனுபவம் செய்து தாவா கோவிலை நிர்வாகம் செய்து வருகின்றனர். தாவா கோவிலுக்கு வழிபாடு செய்ய வருகின்றவர்களுக்கு தீபம் காட்டி பணி செய்ய பிரதிவாதிகளின் முன்னோர்களால் ஊத்திகுளம் கிராமத்தைத்சேர்ந்த காத்தான் மற்றும் சின்னக்கருப்பன் குடும்பத்தார்கள் நியமிக்கப்பட்டனர். தற்போது வரை மேற்படியார்கள் வாரிசுதாரர்கள் தொன்று தொட்டு நாளது தேதி வரை அந்தப் பணியை செய்து வருகின்றனர். அது தவிர அவர்களுக்கோ வாதிகள் வகையறாவிற்கோ எவ்வித உரிமையும் எக்காலத்திலும் தாவா கோவிலிலோ, தாவா சொத்துக்களிலோ இல்லை.

மேற்படி ஐயனார் முத்தையா கோவிலுக்கும் மேற்கில் புதுக்கண்மாய் கரைக்கு தெற்கில், பிரதிவாதிகளின் முன்னோர்களான குலையர் வகையறா பங்காளிகளுக்கு சொந்தமான நஞ்சை நிலப்பகுதியில் வெகுகாலத்திற்கு முன்பு உண்டான பெரிய ஆலமரத்தின் கீழ் சூலாயுதம், அரிவாள் பிரதிஸ்ட்டை செய்து, இந்த பிரதிவாதி வகையறாவுக்கு பூர்வீக பாத்தியப்பட்ட நஞ்சை நில பகுதியை கோவிலுக்கு விட்டு கொடுத்து அதில் ஸ்ரீ சைவ முனீஸ்வரன் ஆலயம் பிரதிஸ்ட்டை செய்து வழிபாடு செய்து வருகிறார்கள். மேற்படி கோவிலுக்கு பணி செய்ய பிரதிவாதிகளின் முன்னோர்கள் ஊத்திகுளம் கிராமத்தைச் சேர்ந்த கட்டாண்டி வகையறா குடும்பத்தை நியமனம் செய்து, நாளது தேதி வரை மேற்படி கோவிலுக்கு மேற்படியார்களின் வகையறாக்கள் பணி செய்து வருகிறார்கள். அது தவிர

அவர்களுக்கு மேற்படி கோவிலில் வேறு எந்த பாத்திய உரிமையும் கிடையாது. இந்த பிரதிவாதிகளும் அவரது குலையர் வகையறா பங்காளிகளும் ஒவ்வொரு தமிழ் வருடம் சித்திரை மாதம் ஒன்று சேர்ந்து காவல் தெய்வங்களான ஐயனார் முத்தையா கோவில் மற்றும் ஸ்ரீ சைவ முனீஸ்வரன் கோவில்களில் வழிபாடு செய்த பின்பு தான் ஏர் இடுதல் என்ற பணியை தொடங்கி வருகிறார்கள். அதே போல் ஆடி மாதம் விவசாய பணியை தொடங்கும் முன் மழை வேண்டி மேற்படி கோவில்களில் வழிபாடு செய்து வெல்ல கட்டி மஞ்சுவிரட்டு நிகழ்ச்சி நடத்தி வருகின்றனர். பின்பு அறுவடை காலங்களில் அறுவடை தொடங்குவதற்கு முன்பு, மேற்படி கோவில்களுக்கு, சிறப்பு வழிபாடு செய்து, அறுவடை பணியை தொடங்குவார்கள்.

ஊத்திகுளம் கிராமத்தில் கிராம பொதுவிலோ அல்லது முத்தரையர் இனத்திற்கு என்றோ எந்த ஒரு கோவிலும் கிடையாது. ஆனால் மேற்படி கிராமத்தில் மருந்தன் வகையறாவும், பெரியாம்பிள்ளை வகையறாவும் சேர்ந்து அவர்கள் சொந்த இடத்தில் சொந்த செலவில் வலையமருந்தன் என்ற பெயரில் கோவில் கட்டி வழிபாடு செய்து வருகின்றனர். அது தவிர வேறு பொதுக்கோவில் ஏதும் கிராமத்தில் இல்லை. கண்டிப்பட்டி சேகரம் செங்குளிப்பட்டி கிராமத்தார்களால் கண்டிப்பட்டி கிராம எல்கையில் மாரியம்மன் கோவில் கட்டப்பட்டுள்ளது. அந்த கோவில் தான் ஊத்திகுளம் கிராம மக்கள் பங்குனி மாதம் 22-ம் தேதி பொங்கல் வைத்து வழிபாடு செய்து வருகிறார்கள். அதற்காக இந்த பிரதிவாதிகள் உட்பட கண்டிப்பட்டி கிராம பொதுமக்களிடம் நன்கொடை வசூல் செய்து விழா நாடகம் நடத்தப்படுகிறது. ஒரு சில வருடம் மட்டும் நாடகம் நடத்தப்படுகிறது. வேறு சிறப்பு நிகழ்ச்சிகள் ஏதும் அந்த கிராமத்தில் கிடையாது. மேற்படி கோவிலுக்கும் பொங்கல் வைத்து வழிபாடு செய்வதற்கு மட்டுமே ஊத்திக்குளம் கிராமத்தார்களுக்கு அனுமதி உண்டு. கோவிலை சொந்தம் கொண்டாடவோ, நிர்வாகம் செய்யும் உரிமையோ கிடையாது. மேற்படி கோவிலின் நிர்வாக உரிமை கண்டிப்பட்டி சேகரம், செங்குளிப்பட்டி, சிறுசெங்குளிப்பட்டி, துவரிப்பட்டி கிராமத்தார்களுக்கு சொந்தமானது. மேற்படி நிர்வாகத்தை மேற்படி கிராமங்களை சேர்ந்த நிர்வாக கமிட்டி கவனித்து வருகிறது. வாதிகள் பிராதில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் பொய். அவர் தனித்த முறையில் தாவா கோவிலின் நிர்வாகம் ஊத்திகுளம் கிராம மக்களிடம் இருப்பது போல் வழக்கு தோதிற்காக பொய் உரைத்துள்ளனர். இந்த பிரதிவாதிகளின் முன்னோர்களான

குலையர் வகையறா பங்காளிகளால் நியமிக்கப்பட்டவர்களின் வாரிசுதாரர்கள் கோவில் பணி செய்வதற்கு மட்டுமே பாத்தியப்பட்டவர்கள். அவர்களுக்கும் ஊத்திகுளம் கிராமத்தார்களுக்கும் எக்காலத்திலும் எந்த உரிமையும் கிடையாது. எனவே வாதிகளின் வழக்கை பிரதிவாதிகளின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும்.

4) வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றின் அடிப்படையில் இந்நீதிமன்றம் கீழ்கண்ட எழுவினாக்களை 23.08.2024-ம் தேதி வனைந்துள்ளது.

**Issues:**

1) Where the plaintiffs are entitled for the relief of Declaration with consequential relief of Injunction?

2) Whether the plaintiff is entitled for the relief of Mandatory Injunction as prayed for?

3) To what other reliefs parties are entitled to?

5) வாதிகள் தரப்பில் 1-ம் வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2-ம் வாதி வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்பட வில்லை. பிரதிவாதிகள் தரப்பில் 5ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

7) **எழுவினாக்கள்-1 முதல் 3**

தாவா வழக்கானது தாவா சொத்தான சர்வே எண்.419/1 விஸ்தீரணம் 0.52.5 இடத்தினைப் பொறுத்து முத்தரையர் இன பரம்பரை கோவில் என விளம்புகை மற்றும் உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கியும், மேற்படி இடத்தில் உள்ள பல வகையான மரங்களை அப்புறப்படுத்த கூடாது என 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு

எதிராக செயலுறுத்துக் கட்டளை மற்றும் செலவுத் தொகை கோரியும் வாதிகளால் இந்த அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8**) மு.வாணியங்குடி குரூப் ஊத்திக்குளம் கிராமத்தில் முத்தரையர் சமுதாய பொதுமக்கள் 120 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள் என்றும், மேற்படி கிராமத்தில் 200 ஆண்டுகள் பழமை வாய்ந்த முத்தரையர்களின் குலதெய்வமான முத்தையா கோயில் முன்னோர்கள் ஆதிகாலம் முதல் அமைத்தும் காத்தான் வகையறா, முத்துக்கருப்பன் வகையறா மற்றும் கருப்பையா அதன்பின்னர் முத்துக்கருப்பன், பெரியகருப்பன், சின்னான் ஆகியோர்கள் முத்தையாசாமியின் அருள் இறங்கி மற்றவர்களுக்கு குறி சொல்லும் வழக்கமாகவும், வழிகாட்டியாகவும் வாழ்ந்து வந்துள்ளார்கள் என்றும், முத்தரையர் சமூகத்தினை பொறுத்து குழந்தை பிறந்தவுடன் முதல் முடி இறக்கி காது குத்தி மூதாதையர்கள் மற்றும் அவர்களுடைய குழந்தைகளுக்கு முத்தையா என பெயர் சூட்டி பரம்பரையாக நேர்த்திகடன் செய்தும், வழிபாடு செய்தும் வந்துள்ளார்கள் என்றும், தாவா கோவிலானது பரம்பரையாக முத்தரையர் இன கோவில் என்றும் வாதிகள் கட்சி செய்துள்ளார்கள்.

வாதிகள் தரப்பில் முத்துக்கருப்பன் என்பவர் வா.சா.1 ஆகவும், கருப்பையா என்பவர் வா.சா.2 ஆகவும் சாட்சியம் அளித்து வ.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களை வாதிகள் குறியீடு செய்துள்ளார்கள். வா.சா.ஆ.1 ஆவணமானது 01.11.2018-ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பதிவேட்டின் உண்மை நகல் ஆவணம் ஆகும். மேற்படி ஆவணத்தில் சர்வே எண்..419/1 நிலமானது முத்தையா கோவில் என குறிப்பிடப்பட்டு அதன் பிறகு முத்தையா என்பது நீக்கப்பட்டு கோவில் என்று மட்டும் விபரம் குறிப்பிடப்பட்டுள்ளதை வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் அறிய முடிகிறது. வா .சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சர்வே எண்.419/1 நிலமானது வாதிகள் குறிப்பிடுவது போன்று முத்தரையர் இன பரம்பரை கோவில் என்பதாக விபரம் எதுவும் குறிப்பிடவில்லை. வா.சா.ஆ.1 ஆவணமானது தாவா சொத்து அமைந்துள்ள கோவிலானது முத்தரையர் இன பரம்பரை கோவில் என்ற வாதிகள் கட்சிக்கு ஆதரவாக இல்லை என்பதை இந்நீதிமன்றத்தால் அறிந்துகொள்ள முடிகிறது. வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் நிதி வசூல் கணக்கு விபரம் என எழுதப்பட்டுள்ளது என வா.சா.1 தனது குறுக்கு விசாரணை

சாட்சியத்தில் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி வா.சா.1 -ன் சாட்சிய சங்கதியின் அடிப்படையில் வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்ததில் நிதி வசூல் விபரம் என குறிப்பிடப்பட்டு மேற்படி ஆவணங்கள் உள்ளன. மேற்படி நிதி வசூல் ஆவணங்களில் கண்ட நிதியினை யார் வசூல் செய்தார்கள் என்றோ, மேற்படி நிதியை யார் செலவு செய்தார்கள் என்றோ விபரம் இல்லை. மேற்படி சங்கதியையும் வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார். வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களும் தாவா சொத்தானது முத்தரையர் இன பரம்பரை கோவில் என்ற சங்கதிக்கு ஆதரவாக எடுத்துக்கொள்ள இயலாது என்பது மேற்படி ஆவணம் மற்றும் சாட்சிய சங்கதி மூலம் இந்நீதிமன்றத்தால் அறிய முடியும் என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதம் ஏற்கும்படி உள்ளது. ஏனெனில் மேற்படி ஆவணங்களானது தாவா சொத்தைப் பொறுத்து போதிய உரிமை பாத்தியம் எதையும் வாதிகளுக்கு அளித்திடாது என்பதை மேற்படி ஆவணங்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

**9**) வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தின் போது, வா.சா.1 குப்பன் வகையறாவைச் சார்ந்தவர் என்றும், 2ம் வாதி கருப்பையா, சின்னக்கருப்பையா வகையறாவைச் சார்ந்தவர் என்றும், 3ம் வாதி குப்பன் வகையறாவைச் சார்ந்தவர் என்றும், 4ம் வாதி பாண்டி ஆறுமுகம் வகையறாவைச் சார்ந்தவர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சங்கதி குறித்து 2ம் வாதி தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், வா.சா.1 காத்தான்பேரன் வகையறாவைச் சேர்ந்தவர்கள் என்றும், தாங்கள் கோடங்கி வகையறாவைச் சேர்ந்தவர்கள் என்றும் வா.சா.1-ன் சாட்சியத்திற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். மேற்கண்ட வா.சா.1, வா.சா.2 சாட்சிய சங்கதிகளின் அடிப்படையில் வா.சா.1, வா.சா.2 இருவரும் தாங்கள் எந்த வகையறாவைச் சேர்ந்தவர்கள் என்பது குறித்து நிரூபித்திட உரிய ஆதரவை தாக்கல் செய்திடாமல் முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பதை மேற்படி நபர்களின் சாட்சியங்கள் மூலம் அறிந்துகொள்ள முடிகிறது.

**10**) வா.சா.1 தனது சாட்சியத்தில், தாவா கிராமத்தில் தனது பாட்டனார் மற்றும் தனது முன்னோர் பெயரில் சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான் என

சாட்சியம் அளித்துள்ளார். தாவா சொத்து அரசு ஆவணத்தில் என்ன பெயரில் பதிவாகியுள்ளது என்றால் முத்தையா கோவில் என்ற பெயரில் பதிவாகியுள்ளது என்றும், முத்தரையர் இன கோவில் என இல்லை என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். காத்தான் வகையறாவும், சின்னக்கருப்பன் வகையறாவும் அவர்களது காலத்தில் தாவா கோவிலுக்கு பூஜை செய்தார்கள் என்றால் சரிதான் என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி தாவா சொத்திற்கு அருகே சைவ முனீஸ்வரர் கோவில் உள்ளது என்றும் மேற்படி கோவிலை கட்டாண்டி வகையறா பூஜை வைத்து வருகிறார்கள் என்றால் சரிதான் என்றும் வா.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். மேற்சொன்ன கட்டாண்டி வகையறாவை பூஜை பணிக்காக பிரதிவாதிகள் நியமித்ததாக சங்கதி குறிப்பிட்டுள்ளார்கள். பிரதிவாதிகள் குறிப்பிட்டுள்ள சங்கதியான சைவ முனீஸ்வரர் கோவிலுக்கு கட்டாண்டி வகையறா பூஜை செய்து வருகிறார்கள் என்பதை வா.சா.1 ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் வா.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தின் போது ஊரில் பொதுக்கோவில் ஒன்று இல்லை என்றும், அவரவர்கள் கற்களை வைத்து வழிபடுவார்கள் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.ஆ.9 ஆனது 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் என்பதும், வா.சா.ஆ.10 ஆனது 7, 8 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் என்பதும் மேற்படி ஆவணங்களை பரிசீலனை செய்கையில் அறிந்துகொள்ள முடிகிறது. வா.சா.ஆ.7, வா.சா.ஆ.8 ஆகியவை கோவில் திருவிழா நடத்தப்பட்டதற்கான நோட்டீஸ் விபரம் என வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.7 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களும் தாவா கோவிலானது வாதிகள் குறிப்பிடுவது போன்று முத்தரையர் இனத்திற்கு பாத்தியப்பட்ட கோவில் என தீர்மானிப்பதற்கு எடுத்துக் கொள்ளக்கூடிய ஆவணங்களாக இல்லை என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதம் ஏற்கும்படி உள்ளது.

**11**) வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் தாவா வழக்குச் சொத்தானது வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதை நிரூபித்திடக்கூடிய ஆவணங்களாக எடுத்துக் கொள்ள இயலாது என்று பிரதிவாதிகள் தரப்பில் வாதம் புரியப்பட்டது. ஏனெனில்

மேற்படி ஆவணங்களானது ஒரு கோவிலுக்கு திருவிழா நடத்துவதற்காக ஊரார் சார்பாக நிதி வசூல் செய்யப்படுவதும் மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் நிதி வசூல் செய்யக்கூடிய நபர்கள் அதன் அடிப்படையில் கோவிலுக்கு உரிமை பாத்தியம் கோர இயலாது என்பதும் அதேபோல் திருவிழா நடத்துவதற்கு ஆட்சேபிக்கப்படும் அறிவிப்பின் அடிப்படையில் உரிய கோவிலுக்கு அந்த நபர்கள் உரிமை பாத்தியம் கோரிட இயலாது என்றும் பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை தெரிவிக்கப் பட்டுள்ளது. மேற்படி ஆட்சேபணை ஏற்புடையதாக உள்ளது. பிரதிவாதிகள் வாதிகள் வழக்கு சங்கதியை மறுத்து தாவா சொத்தில் அமைந்துள்ள கோவிலானது தங்களால் ஏற்படுத்தப்பட்டது என்றும் மேற்படி சர்வே எண்.419/1-ல் அமைந்துள்ள தாவா கோவிலுக்கு வழிபாடு செய்ய வருகின்றவர்களுக்கு தீபம் காட்டி பணி செய்ய பிரதிவாதிகளின் முன்னோர்களால் ஊத்திகுளம் கிராமத்தைச்சேர்ந்த காத்தான் மற்றும் சின்னக்கருப்பன் குடும்பத்தார்கள் நியமிக்கப்பட்டார்கள் என்றும், தற்போது வரை மேற்படியார்கள் வாரிசுதாரர்கள் தொன்று தொட்டு நாளது தேதி வரை அந்தப் பணியை செய்து வருகின்றனர் என்றும், அது தவிர அவர்களுக்கோ வாதிகள் வகையறாவிற்கோ எவ்வித உரிமையும் எக்காலத்திலும் தாவா கோவிலிலோ, தாவா சொத்துக்களிலோ இல்லை என்றும் ஆட்சேபணை செய்தும், தாங்கள் குலையர் வகையறாவைச் சேர்ந்தவர்கள் என்றும் கட்சி செய்துள்ளார்கள். மேற்படி பிரதிவாதிகள் தரப்பு வழக்கு சங்கதியை வா.சா.1 மறுத்துள்ளார். குறிப்பாக குலையர் வகையறாவைச் சேர்ந்தவர்கள் தான் காத்தான் வகையறாவையும், சின்னக்கருப்பன் வகையறாவையும் தாவா கோவிலுக்கு பூஜை செய்ய நியமித்தார்கள் என்றால் இல்லை என வா.சா.1 சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சங்கதி குறித்து வா.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் ஆதியில் தாவா கோவிலுக்கு பூசாரியை நியமித்தது குலையர் வகையறா என்றால் சரிதான் என சாட்சியம் அளித்து பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபணை சங்கியை ஒப்புக்கொண்டு வா.சா.2 சாட்சியம் அளித்து பிரதிவாதிகள் தரப்பு ஆட்சேபணை சங்கதியை உறுதிபடுத்தியுள்ளார். தாவா கோவிலை காத்தான் வகையறா பூஜை செய்து வந்தார்கள் என்றால் சரிதான் என வா.சா.2 சாட்சியம் அளித்துள்ளார். மேற்சொன்ன சங்கதியானது பிரதிவாதிகள் தரப்பில் தாவா சோவிலுக்கு ஆதியில் பூஜை பணிகள் செய்ய காத்தான வகையறாவை குலையர் வகையறா நியமனம் செய்தார்கள் என்ற சங்கதியை

உறுதியூட்டிடும் வகையில் உள்ளது என்பதை இந்நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகிறது.

**12**) 1 முதல் 4 வாதிகள் சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் தாலுகா, ஊத்திக்குளம் கிராமத்தில் இருக்கும் முத்தையா கோவில் பங்காளிகள் என்ற வாதிகள் தரப்பு வழக்கு சங்கதியை உறுதியூட்டி நிரூபித்திட உரிய ஆதரவு எதுவும் தாக்கல் செய்திடவில்லை. ஏனெனில் வா.சா.1, வா.சா.2 அளித்துள்ள சாட்சிய சங்கதிகளின் படி வாதிகளை தவிர மேலும் சில நபர்கள் பங்காளி உறவில் உள்ளார்கள் என்பதை இந்நீதிமன்றத்தால் அறிந்துகொள்ள முடிகிறது. வா.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், ஒரு பங்காளிக்கு ஒரு குலதெய்வம் என்றால் சரிதான் என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படிசாட்சிய சங்கதியானது தாவா பிராது சங்கதிக்கு முரணாக உள்ளதை அறிய முடிகிறது. ஏனேனில் வாதிகள் ஒரே பங்காளிகள் அல்ல என்பதும் வாதிகள் 4 பங்காளிகளாக உள்ளனர் என வா.சா.2 தனது சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளதிலிருந்து அறிய முடிகிறது. அந்த வகையில் பார்க்கும்பொழுது 4 பங்காளிகளான வாதிகளுக்கு குல தெய்வமாக தாவா கோவில் இருந்தது என்ற சங்கதி ஏற்கும்படி இல்லை.

**13**) வாதி தனது பிராதில் தாவா கோவிலானது ஊத்திக்குளம் கிராமத்தை சேர்ந்த கோவில் என சங்கதி குறிப்பிட்டுளளார். ஊத்திக்குளம் கிராமத்தில் முத்தரையர் சமுதாய பொதுமக்கள் வாழ்ந்து வருவதாக சங்கதி குறிப்பிட்டுள்ளார். முத்தரையர் என பரம்பரை கோவில் என தாவா கோவிலை விளம்புகை செய்திட பரிகாரம் கோரியுள்ளார். மேற்படி சங்கதி குறித்து வா.சா.2 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தின்போது, ஊத்திக்குளத்தைச் சேர்ந்த மக்களுக்கும், முத்தையா கோவில் மக்களுக்கும் சம்பந்தம் கிடையாதா என்றால் சம்பந்தம் கிடையாது என சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியமானது பிராதில் வாதிகள் குறிப்பிட்டுள்ள மேற்படி சங்கதிக்கு முரண்பட்ட சங்கதியாக உள்ளது என்பதை இந்நீதிமன்றத்தால் அறிந்துகொள்ள முடிகிறது. தாவா கோவிலில் குழந்தைகளுக்கு மொட்டை அடித்து, காது குத்தி, கிடா வெட்டி சாமி கும்பிடுவதால் மட்டும் வாதிகளின் முத்தரையர் இன பரம்பரை கோவிலாக தாவா கோவிலை கருத இயலாது என்றும் ஏனெனில் வாதிகள்

குறிப்பிடும் தாவா கோவிலைப் போன்று மதுரையில் உள்ள பாண்டி கோவிலுக்கு தென் தமிழகத்தில் உள்ள மக்கள் வந்து மொட்டை அடித்து, காது குத்தி, கிடா வெட்டி சாமி கும்பிடுவார்கள் என்றும் அவ்வாறு சாமி கும்பிடும் நபர்கள் அனைவருக்கும் பாண்டி கோவிலானது குல தெய்வமாக இருக்காது என்ற சங்கதியை வா.சா.2-ம் தனது -குறுக்கு விசாரணை சாட்சியத்தின் மூலமாக ஒப்புக்கொண்டுள்ளார்.

**14**) வா.சா.1 தனது சாட்சியத்தில், தாவா வழக்கானது என்ன பரிகாரத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற கேள்விக்கு தாவா கோவிலானது தங்களுடைய குல தெய்வ கோவில் என பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளதாக சாட்சியம் அளித்தும் வா.சா.2 மேற்படி சங்கதி குறித்து முத்தையா கோவில் தங்களது கோவில் என வழக்கு போட்டுள்ளதாகவும் தாவா விளம்புகை பரிகாரத்திற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதை பார்க்கையில் தாவா வழக்கு என்ன பரிகாரத்திற்காக எதை ஆதரவாக கொண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற சங்கதி வா.சா.1, வா.சா.2-க்கு தெரியவில்லை என்ற பிரதிவாதிகள் தரப்பு வாதம் ஏற்புடையதாக உள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ. 1 முதல் பி.வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் தாவா சொத்தைப் பொறுத்த சங்கதியானது பிரதிவாதிகள் மேற்கொள்கிறார்கள் என்ற சங்கதிக்கு ஆதரவாக எடுத்துக்கொள்ள இயலாது என்றும் ஏனெனில் மேற்படி ஆவணங்களானது யார் வேண்டுமானாலும் ஏற்படுத்திக்கொள்ளலாம் என்ற வாதிகள் தரப்பு வாதம் ஏற்கும்படி உள்ளது. பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.6 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் தாவா கோவிலைப் பொறுத்து பிரதிவாதிகள் தான் நிர்வாகம் செய்து வருகிறார்கள் என்ற சங்கதியும் ஏற்புடையதாக இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானம் செய்கிறது. தாவா சொத்தைப்பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரிடும் வாதிகள் மேற்படி விளம்புகை பரிகாரத்திற்கு ஆதரவாக ஒத்துரைத்து உறுதியூட்டக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்திடவில்லை என்பதாலும் தாவா விளம்புகை பரிகாரத்திற்கு ஆதரவாக வா.சா.1, வா.சா.2 சாட்சியம் அளித்திடவில்லை என்பதாலும் வாதிகள் கோரிய விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் மேற்படி விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு ஆதரவாக கிடைக்கத்தக்கதல்ல என்பதால் அதன் தொடர் பரிகாரமான உறுத்துக்கட்டளை பரிகாரமும் தாவா

சொத்தைப் பொறுத்து வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 1க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. தாவா சொத்தைப் பொறுத்து விளம்புகை மற்றும் உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 1-க்கு இந்நீதிமன்றம் தீர்வு கண்டுள்ள காரணத்தால் தாவா சொத்தைப் பொறுத்து செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 2-க்கும் இந்நீதிமன்றம் தீர்வு கண்டும், வழக்கின் தன்மையை கருதியும் இதர பரிகாரங்கள் எதுவும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என எழுவினா 3-க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப் பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

PANDY R
Digitally signed by PANDY R
Date: 2026.04.17 16:21:48 +0530

சார்பு நீதிபதி
சிவகங்கை

<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்-</u>

வா.சா.1 – முத்துக்கருப்பன் (1ம் வாதி)

வா.சா.2 – கருப்பையா (2ம் வாதி)

<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u> :

வா.சா.ஆ.1 - 01.11.2018 - வாதி கோவில் இடத்திற்குரிய செட்டில்மெண்ட் பதிவேடு - உண்மை நகல்

வா.சா.ஆ.2 - 14.09.1980 - வாதி கோவில் இடத்திற்குரிய நிதி வசூல் கணக்கு விபரம் அசல் நோட்புக்

வா.சா.ஆ.3 - 1991 முதல் 1999 வரை வாதி கோவில் இடத்திற்குரிய நிதி வசூல் கணக்கு விபரம் அசல் நோட்புக்

வா.சா.ஆ.4 - 2000-2001 - வாதி கோவில் இடத்திற்குரிய நிதி வசூல் கணக்கு விபரம் அசல் நோட்புக் (எண்ணிக்கை 2)

வா.சா.ஆ.5 - 19.10.2016 - வாதி கோவில் இடத்திற்குரிய நிதி வசூல் கணக்கு விபரம் அசல் நோட்புக்

வா.சா.ஆ.6 - 06.06.2017 - வாதி கோவில் இடத்திற்குரிய நிதி வசூல் கணக்கு விபரம் அசல் நோட்புக்

வா.சா.ஆ.7 - 18.04.2013 - வாதிகள் தரப்பில் கோவில் திருவிழா நடத்தப்பட்டதற்கான நோட்டீஸ் விபரம் - அசல்

வா.சா.ஆ.8- 18.04.2018 - வாதிகள் தரப்பில் கோவில் திருவிழா நடத்தப்பட்டதற்கான நோட்டீஸ் விபரம் - அசல்

வா.சா.ஆ.9 - 12.03.2019 - வாதிகள் தரப்பில் 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல், ஒப்புகை அட்டை - அசல்

வா.சா.ஆ.10 - -- வாதிகள் தரப்பில் 7, 8 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல், ஒப்புகை அட்டை - அசல்

<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி-</u>

பி.வா.சா.1 - ராமையா (5ம் பிரதிவாதி)

<u>பிரதிவாதிகள்தரப்பு சான்றாவணங்கள்:</u>

பி.வா.சா.ஆ.1- 14.04.2018 - கோவில் நிர்வாக குழு அமைந்து தலைவர், செயலாளர், செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர் தேர்வு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானம் தாகக்ல் செய்யும் நோட்டில் 5ம் பக்கத்தில் மேற்படி தீர்மானம் பி.வா.சா.ஆ.1

பி.வா.சா.ஆ.2- 22.04.2018 - கோவில் கட்டிடப்பணி செய்வதற்கான தீர்மானம். மேற்படி தீர்மானத்திற்கான நோட்டில் பக்கம் 7-ல் உள்ளது. மேற்படி தீர்மானம் பி.வா.சா.ஆ.2

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.3- | 20.05.2018- | கோவில் பாலாலயம் செய்வதற்கான தீர்மானம். மேற்படி தீர்மானத்திற்கான நோட்டில் பக்கம் 9-ல் உள்ளது. மேற்படி தீர்மானம் பி.வா.சா.ஆ.3 |
| பி.வா.சா.ஆ.4- | 27.07.2018 - | கோவில் கட்டுவது சம்பந்தமாக ஸ்தபதிகளிடம் ஒப்பந்த புள்ளி பெறுவது சம்பந்தமாக கட்டிட திருப்பணி செய்ய பூமி பூஜை செய்வதற்கான தீர்மானமும், அனைத்து வைபவங்களுக்கும் கிராம மக்களை அழைக்க வேண்டி தீர்மானம் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி தீர்மானம் தீர்மானத்திற்கான நோட்டில் பக்கம் 11-ல் உள்ளது. மேற்படி தீர்மானம் பி.வா.சா.ஆ.4 |
| பி.வா.சா.ஆ.5- | 15.04.2018 - | புணரமைப்பு மாதிரி கட்டிட வடிவமைப்பு மற்றும் வரைபடம் ஸ்தபதியிடம் பெற்ற முனைவு (கொட்டேசன்) மதிப்பு பி.வா.சா.ஆ.5 |
| பி.வா.சா.ஆ.6- | -- | பழைய ஆலயத்தின் அமைப்பு புகைப்படம் அதற்கான சிடி மற்றும் 65 பி சான்று பி.வா.சா.ஆ.6 |

PANDY R
Digitally signed by PANDY R
Date: 2026.04.17 16:21:39 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை

Subordinate Court,
Sivagangai
O.S.No.564/2019
**Draft/Fair Judgment**
17.04.2026.